# DEPOSITION OF WITNESS

*( XXIII Code of Criminal Procedure)*

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, SIVAGANGAI.**

**Deposition of witness for }** **Prosecution:**PW.7

**Defence:**

**Case No.** Sessions Case No.**SC- 9/2017**

| | | | |
|---|---|---|---|
| **Name** | கருப்பையா | **S/o.** | சின்னு |
| **Village** | நமணசமுத்திரம் | **Taluk** | திருமயம் |
| **Religion** | இந்து | **Calling** | அ.சா.7 |
| **Date** | 02-01-2023 | **Age** | 72/2022 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X 1872 of the day 02.01.2023.**

**முதல் விசாரணை:**

நான் தற்சமயம் நமணசமுத்திரத்திற்கு அருகே உள்ள வடக்குப்பட்டி கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் இந்திய இராணுவத்தில் பணிபுரிந்து ஓய்வுப் பெற்று வங்கியில் செக்யூரிட்டியாக பணிபுரிந்து வந்து அதிலும் ஓய்வு பெற்றுள்ளேன். தற்சமயம் நான் வீட்டில் வசித்து வருகிறேன். எனக்கு ஆஜர் எதிரிகளை தெரியாது. கடந்த 26.04.2015ம் தேதி எனது அண்ணன் மகளான 3வது எதிரி வசந்தி காலை 08.00 மணியளவில் அழுது கொண்டு இருந்தது. நான் எனது மனைவி மற்றும் ஊர் மக்கள் ஓடிச் சென்று என்ன என்று விசாரித்தோம். வசந்தியின் கணவர் கிருஷ்ண மூர்த்தி ரயிலில் அடிபட்டு விட்டதாக வசந்தி கூறினார். அதன் பின்னீடு காவல் துறையினர் விசாரித்து திருமயம் அரசு மருத்துவமனைக்கு கிருஷ்ணமூர்த்தியின் உடலை எடுத்து சென்றார்கள். பிரேத பரிசோதனைக்கு பின்னீடு கிருஷ்ண மூர்த்தியின் உடலை நல்லடக்கத்திற்காக கிருஷ்ணமூர்த்தியின் ஊரான

ஊரணிபுரத்திற்கு கொண்டு சென்றார்கள். அதன் பின்னீடு நாங்கள் எங்கள் வீட்டிற்கு வந்துவிட்டோம். அவர்கள் அவர்கள் வீட்டிற்கு சென்றுவிட்டார்கள். அதன் பின்னீடு 3 மாதங்கள் கழித்து எனது அண்ணன் மருமகன் கிருஷ்ணமூர்த்தி ரயிலில் அடிபட்டு இறக்கவில்லை என்றும் வசந்தி தான் ஆட்களை வைத்து கொன்றதாகவும் கேள்விப்பட்டோம். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள். நான் நடந்த விபரங்களை கூறினேன்.

**2வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

போலீசார் என்னை பிரேதம் கிடந்த இடத்தில் வைத்து என்னை விசாரித்தார்கள். அதன் பிறகு போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். 3வது எதிரி வசந்தி எனது உடன் பிறந்த அண்ணன் மனைவி என்றால் சரிதான். எனது தகப்பனார், தாயாருக்கு எங்கள் ஊரில் அதிக சொத்துக்கள் இருந்தது என்றால் சரிதான். இந்த 3வது எதிரி குடும்பத்திற்கும் எங்களுக்கும் சொத்து சம்பந்தமாக நீதிமன்றத்தில் வழக்கு நடந்ததா என்றால் இல்லை. எங்கள் இரண்டு குடும்பத்திற்கும் சொத்து சம்பந்தமாக வழக்கு நடைபெற்றது என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக வழக்கு நடைபெறவில்லை என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. இறந்த கிருஷ்ணமூர்த்தி வீட்டோடு மாப்பிள்ளையாக தான் 3வது எதிரியுடன் குடித்தனம் நடத்தி வந்தார் என்றால் சரிதான். 3வது எதிரிக்கு 3 பெண் குழந்தைகள் உள்ளார்கள் என்றால் சரிதான். அந்த 3 பெண் குழந்தைகளும் பள்ளியில் படித்து வந்தார்கள் என்றால் சரிதான். 3வது எதிரிக்கு சொந்தமாக டீக்கடை, மளிகை கடை வீட்டோடு நடத்தி வந்தார்கள் என்றால் சரிதான். என் அண்ணன் மகள் 3வது எதிரி வசந்திக்கும் அவரது கணவருக்கும் இருவரும் சேர்ந்து வாழ்ந்த காலக்கட்டங்களில் பிரச்சினை ஏதும் ஏற்படவில்லை மற்றும் காவல் நிலையத்திற்கும் இதுவரை சென்றதில்லை என்றால்

சரிதான். 3வது எதிரியின் டீக்கடைக்கு  எதிராக சுமார் 20 அடி தூரத்தில் நமணசமுத்திரம் காவல் நிலையம் உள்ளது என்றால் சரிதான். பொதுவாக அந்த சாலையில் ஆட்கள் எப்போதுமே போக வர இருப்பார்கள் என்றால் சரிதான். கிருஷ்ணமூர்த்தி இறந்த பிறகு 3வது எதிரி டீக்கடை மற்றும் மளிகை கடை நடத்தி வந்தார் என்றால் சரியல்ல. 3வது எதிரி வசந்தி தனது கணவர் இறந்த பிறகு டீக்கடை மற்றம் மளிகை கடை நடத்தி வந்தார் என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள 3வது எதிரியுடன் சேர்ந்து மற்ற இரண்டு எதிரிகளும் கிருஷ்ண மூர்த்தியை அடித்துக் கொன்றதாக சொன்ன விஷயம் போலீசார் சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். பிரேதம் கிடந்த இடத்தில் நான் சென்ற போது ஊர் மக்கள் 100 பேர் இருந்தார்கள் என்றால் சரிதான். அப்போது ரயில்வே போலீசார் இருவர் மட்டும் இருந்தார்கள் என்றால் சரிதான். கிருஷ்ணமூர்த்தியின் பிள்ளைகள் கிருஷ்ணமூர்த்தி இறந்த பிறகு பள்ளிக்கு சென்றார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் சொல்வது போல சொன்ன நேரத்தில் சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**1வது எதிரி தரப்பில் 2வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார்கள்.**

**3வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

போலீசார் விசாரணையில் நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகளை சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இறந்த கிருஷ்ணமூர்த்தியின் வீட்டிற்கும் எனது வீட்டிற்கும் 2 கி.மீ தூரம் இருக்குமா என்றால் 1 கி.மீ தூரம்

தான் இருக்கும். 3வது எதிரி வசந்தியுடன் வழக்கு சமயத்தில் பேசிக் கொண்டிருந்தோம் என்றால் சரிதான். தற்போது பேசுவதில்லை. வசந்தி கிருஷ்ண மூர்த்தியை கொன்றுவிட்டது என்று தெரிந்த காரணத்தில் அப்பொழுதிலிருந்து நான் பேசுவதில்லை. சாட்சி அடக்கன் மகன் ஆறுமுகம் எனது மகளின் கணவராவார். ஆஜர் 3வது எதிரி வசந்தியின் வீட்டிற்கு நான் போனது கிடையாது. ஆஜர் 3வது எதிரி வீட்டில் என்ன கடை வைத்து நடத்தி வருகிறார் என்று எனக்கு தெரியாது. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது என்றும் போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 3வது எதிரியுடன் நான் பேசுவதில்லை என்பதால் நான் அவருக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 3வது எதிரியின் 3 பெண் குழந்தைகள் என்ன படிக்கிறார்கள் எங்கு படிக்கிறார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். அவர்களுடன் நான் பேசியது கிடையாது.

# DEPOSITION OF WITNESS

*( XXIII Code of Criminal Procedure)*

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, SIVAGANGAI.**

**Prosecution:**PW.8

**Deposition of witness for }**

**Defence:**

**Case No.** Sessions Case No.**SC- 9/2017**

| | | | |
|---|---|---|---|
| **Name** | ஆறுமுகம் | **S/o.** | அடைக்கன் |
| **Village** | வடக்கிப்பட்டி | **Taluk** | திருமயம் |
| **Religion** | இந்து | **Calling** | அ.சா.8 |
| **Date** | 02-01-2023 | **Age** | 47/2022 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X 1872 of the day 02.01.2023.**

**முதல் விசாரணை:**

நான் தற்சமயம் நமணசமுத்திரம் அருகே உள்ள வடக்கிப்பட்டியில் வசித்து வருகிறேன். நான் தேக்காட்டூர் பஞ்சாயத்து துணை தலைவராக இருந்தேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 26.02.2015ம் தேதி காலை 08.00 மணிக்கு நான் வீட்டிலிருக்கும் போது ரயில் ரோட்டில் ஒரே கூட்டமாக இருந்தது. நான் சென்று பார்த்தேன். அங்கு கிருஷ்ணமூர்த்தி ரயிலில் அடிபட்டு தலை நசுங்கி இறந்து கிடந்தார். வீட்டில் சண்டை என்பதால் இறந்துவிட்டதாக பக்கத்திலிருந்தவர்கள் கூறினார்கள். நான் தான் கிருஷண்மூர்த்தியின் மகள்களான பவித்ரா, அன்புக்கரசி ஆகியோர்களை பள்ளியிலிருந்து சுமார் 12.00 மணியளவில் அழைத்து வந்தேன். அதன் பிறகு கிருஷண்மூர்த்தியின் பிரேதத்தை திருமயம் அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்காக கொண்டு சென்றார்கள். பிரேத பரிசோதனை முடிந்த பிறகு நல்லடக்கத்திற்காக கிருஷ்ணமூர்த்தியின் பிரேதத்தை அவரது சொந்த

ஊரான ஊரணிபுரத்திற்கு கொண்டு சென்றார்கள். அதன் பிறகு 3 மாதங்கள் கழித்து 24.05.2015 அன்று மாலை 05.00 மணியளவில் காவல் நிலையத்தில் தகவல் தந்து என்னை அழைத்தார்கள். அப்போது 3வது எதிரி வசந்தி காவல் நிலையத்தில் வாக்குமூலம் கொடுத்தது. வசந்தி, மூத்த மகள் அன்புக்கரசி, 1,2 எதிரிகள் சேர்ந்து தான் கிருஷ்ணமூர்த்தியை அடித்துக் கொன்று ரயில்வே தண்டவாளத்தில் போட்டதாக வசந்தி கூறியது. அதன் பிறகு இரவு 08.00 மணிக்கு வசந்தியை கைது செய்து கொண்டு சென்றார்கள். இது சம்பந்தமாக போலீசார் விசாரிக்க நான் நடந்த விபரங்களை கூறினேன்.

**2வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை நமணசமுத்திரம் காவல் நிலையத்தில் வைத்து 26.02.2015 அன்று விசாரித்தார்கள் என்றால் சரிதான். அதன் பிறகு போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் 3 மாதங்கள் கழித்து நமணசமுத்திரம் காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். போலீசார் விசாரணையில் கிருஷ்ணமூர்த்தியின் பிள்ளைகளான பவித்ரா மற்றும் அன்புக்கரசியை பள்ளியிலிருந்து அழைத்து வந்தேன் என்பதை சொல்லவில்லை. போலீசார் கேட்காததினால் சொல்லவில்லை. என்னை போலீசார் விசாரணை செய்யும் போது நமணசமுத்திரம் காவல் நிலையத்தில் 4 மணிநேரம் இருந்தேன். சம்பவம் நடந்த காலத்தில் இரண்டு பிள்ளைகள் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தார்கள். 3வது பிள்ளையைப் பற்றி தெரியவில்லை. கிருஷ்ண மூர்த்தியின் 2வது மகள் அபிராமியும் 3வது மகள் பவித்ராவும் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் எந்த பள்ளியில் படித்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. அன்புக்கரசி படித்துக் கொண்டிருந்தது. அன்றைய தினம் பள்ளிக்கு சென்ற விபரம் தெரியாது. இறந்த கிருஷ்ணமூர்த்திக்கும் அவரது மனைவி 3வது

எதிரி வசந்திக்கும் அவர்கள் வாழ்ந்த காலத்தில் பிரச்சினை ஏற்பட்டு காவல் நிலையம் எதுவும் செல்லவில்லை. 3வது எதிரிக்கு நமணசமுத்திரத்தில் அதிக சொத்துக்கள் இருந்தது என்றால் சரிதான். சொத்துக்கள் சம்பந்தமாக 3வது எதிரிக்கும் அவரது அக்கா கணவருக்கும் வழக்கு நடைபெற்று அந்த வழக்கு நிலுவையில் இருந்தது. எனக்கு சொந்த ஊர் வடக்கிப்பட்டி. அ.சா.7 கருப்பையா எனது மாமனார் ஆவார். எனக்கும் எனது மாமனாருக்கும் வடக்கிப்பட்டி சொந்த ஊர். 1, 2 எதிரிகளை இன்று தான் நான் பார்க்கிறேன். இதற்கு முன்பு பார்த்ததில்லை. நான் சொன்ன நேரத்தில் சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றும் போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க உண்மையை மறைத்து பொய்யாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**1வது எதிரி தரப்பில் 2வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார்கள்.**

**3வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

3வது எதிரி வசந்தியுடன் நான் பேசிக்கொள்வதில்லை என்றால் வசந்தியை கைது செய்த நாள் முதல் நான் பேசிக்கொள்வதில்லை. போலீசார் என்னை 26.02.2015 அன்று நமணசமுத்திரம் காவல் நிலையத்தில் மதியம் 12.00 - 01.00 மணியளவில் என்னை விசாரித்தார்கள். அந்த காவல் நிலையம் 3வது எதிரியின் வீட்டிற்கு எதிரே உள்ளது என்றால் சரிதான். அன்றைய தினம் என்னை விசாரித்துவிட்டு அனுப்பிவிட்டார்கள். கையெழுத்து எதுவும் வாங்கவில்லை. கிருஷ்ணமூர்த்தியின் பிள்ளைகளை பள்ளியிலிருந்து சுமார் 12.00 மணியளவில் அழைத்து வந்தேன். அந்த பள்ளி ஆங்கில மீடியம் பள்ளி. அந்த பள்ளியின் பெயர் தெரியாது. அந்த பள்ளி புதுக்கோட்டையில் உள்ளது. அன்புக்கரசி, அபிராமி

ஆகிய இரு பிள்ளைகளை அழைத்து வந்தேன். தற்போது சாட்சி பவித்ரா, அபிராமி ஆகியோர்களை அழைத்து வந்ததாக கூறுகிறார். அந்த பிள்ளைகளிடம் உங்கள் அப்பா இறந்துவிட்டதாக கூறி அழைத்து வந்தேன். சிறிய பிள்ளைகள் என்பதால் வேறு விபரங்கள் எதுவும் சொல்லவில்லை. பிள்ளைகளும் என்னிடம் விபரங்கள் சொல்லவில்லை. என்னை போலீசார் காவல் நிலையத்தில் வைத்து விசாரிக்கும் போது ஊரர் கூட்டமாக இருந்தார்கள் அதில் எனது மாமனார் இருந்தாரா என்று நான் கவனிக்கவில்லை. அதன் பிறகு 3 மாதம் கழித்து நமணசமுத்திரம் காவல் நிலையத்தில் வைத்து என்னை விசாரித்தார்கள். அந்த காவல் நிலையம் 3வது எதிரி வசந்தி வீட்டிற்கு எதிரே உள்ளது. அப்பொழுதும் ஊரார், நான், ஊர் தலைவர் நடராஜன், பிரசிடெண்ட் சுந்தரகோபாலன், அய்யாகண்ணு ஆகியோர் இருந்தார்கள். மற்றவர்கள் பெயர் ஞாபகம் இல்லை. ஊர்காரர்கள் இருந்தார்கள். அப்பொழுது என்னிடம் போலீசார் வாக்குமூலம் வாங்கினார்கள். முதல் விசாரணையில் சொன்னது போல் வாக்குமூலம் கொடுத்தேன். அப்பொழுது போலீசார் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். நான் சொல்வது போல் வழக்கு சம்பவங்கள் எதுவும் எனக்கு தெரியாது என்றும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 3வது எதிரி வசந்தி சொத்துக்களை நான் தான் விற்றுக் கொடுத்தேன். 2022ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் நான் விற்றுக் கொடுத்தேன். நான் சொத்துக்களை விற்ற பணத்தை 3வது எதிரி வசந்திக்கு செட்டில் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. அந்த பணத்தை 3வது எதிரி வசந்தி என்னிடம் கேட்டதற்கு நான் கொடுக்கவில்லை என்றும் அதனால் அவருக்கு எதிராக நான் நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.